IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**Pr.O.P.No. 79/2019**

சாட்சி : PW– 2

பெயர் : திரு. ஏழுமலை தேதி : 26.02.2024

**குறுக்குவிசாரணை** :– ( எதிர்மனுதாரர்கள் தரப்பில் )

நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். மனுதாரரை எனக்கு எப்படி தெரியும் என்றால் மனுதாரர் குடியிருக்கும் பள்ளிப்பட்டி கிராமத்தில் எனக்கு விவசாய நிலம் உள்ளது. அந்த வகையில் தெரியும். என் மகள் அங்கையர்கண்ணியும் மனுதாரரும் தோழிகள். மனுதாரர் என்மகளின் தோழி என்பதால் மனுதாரர் கேட்டுக்கொண்டதன்பேரில் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.–1 உயில் எழுதிவைத்த கணேசனின் தகப்பனார் பெயர் வேலாயுதபிள்ளை. ம.சா.ஆ.–1 உயில் மொத்தத்தில் 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்தது. சொத்துக்களில் பாதி மனுதாரருக்கு உயில் மூலம் எழுதிவைக்கப்பட்டது.

உயிலில் கண்ட சொத்துக்கள் கணேசனுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் மனுதாரரின் தாயாரின் நகைகளை விற்று 2 ஏக்கர் 30 சென்ட் நிலத்தை கிரயம் பெற்றதாக கணேசன் என்னிடம் சொன்னார். கணேசன் சொத்துக்களை கிரயம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. ம.சா.ஆ.–1 உயில் எழுதுவதற்கு யார் தகவல் கொடுத்தார்கள், யாரால் உயில் தயாரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. கணேசன் ஒரு மாதமாக உயில் எழுதபோவதாக சொல்லிவந்தார். ம.சா.ஆ.–1 உயிலில் நான் நிலவாரப்பட்டியில் உள்ள வழக்குரைஞர் திரு.மணிகண்டன் என்பவரின் வீட்டில் வைத்து சாட்சி கையொப்பமிட்டேன். கணேசன் குடியிருந்த வலசையூருக்கும் நிலவாரப்பட்டிக்கும் இடையே 30 கி.மீ. தூரம் இருக்கும். கணேசன் ஏற்கனவே நிலவாரப்பட்டிக்கு சென்று உயிலை தயார்

செய்து வைத்திருந்தார். நான் அங்கு சென்றவுடன் என்முன்பு உயிலில் கணேசன் கையொப்பமிட்டார். ம.சா.ஆ.– 1 உயில் எந்த ஆவணங்களின் அடிப்படையில் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. கணேசன் ஏற்கனவே பத்திரங்களை கொடுத்திருந்தார். உயிலை பதிவுசெய்ய சொல்லி வழக்குரைஞரோ நாங்களோ சொல்லவில்லை.

மனுதாரரின் தகப்பனார் கணேசனுக்கு முத்துபொண்ணு, பாப்பா என்று 2 மனைவிகள். இருவரும் உடன் பிறந்த சகோதரிகள். 2வது மனைவியை பாப்பா என்று அழைப்பார்கள் அவர் பெயர் குறிப்பாக எனக்கு தெரியாது. அனைவரும் ஒரே இடத்தில் குடியிருந்து வந்தனர் என்றார் சரிதான். கணேசன் இருதய நோயால் பாதிக்கப்பட்டு, சென்னை அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். பின்பு பெங்களூரில் உள்ள புட்டபர்த்தி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். சிகிச்சைக்கு பின்பு கணேசன் ஒரு வருடம் உயிருடன் இருந்தார். கணேசனின் இறப்பு மற்றும் தொடர்புடைய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். கணேசன் இறப்பதற்கு சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பே மனுதாரரின் தாயாரும் கணேசனின் முதல் மனைவியுமான முத்துபொண்ணு இறந்துவிட்டார்.

கணேசன் இறப்பில் இறுதி சடங்குகளை அவரது 2வது மனைவியும் மகனும் செய்தார்கள் என்றால் மனுதாரரும் கலந்துகொண்டார். கணேசன் தனது இரண்டு மனைவிகள் மற்றும் குழந்தைகளை சமமாக பாவித்து வந்தார். மனுதாரருக்கு மட்டும் அவரது தகப்பனார் உயில் எழுதிவைத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.–1 உயில் மனுதாரரால் போலியாக தயாரிக்கப்பட்டது என்றும், அதற்கு நானும் உதவியாக இருந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. கணேசன் விருப்பப்பட்டு உயில் எழுதியிருந்தால் அனைத்து குழந்தைகளுக்கும் எழுதிவைத்திருப்பார் என்றால் சரியல்ல.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.